371—

கண்ணாடி நாரிழைப் படகுகள்

****34452—முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராமநாதபுரம் மாவட்டத்தில் கண்ணாடி நாரிழைப் படகுகள் மூலமாக மீன்பிடிக்க அரசு அனுமதி வழங்குமா?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

இராமநாதபுரம் மாவட்டத்தில் கண்ணாடி நாரிழைப் படகுகளில் மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மற்றும் தூத்துக்குடியிலே கண்ணாடி நாரிழைப் படகுகள் மோட்டார் வசதியுடன் செயல்படுகின்றன. அந்த அடிப்படையிலே இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள மீனவர்களுக்கு மரத்தினால் செய்யப்பட்ட வள்ளங்களுக்குப் பதிலாக, கண்ணாடி நாரிழைப் படகுகளை அளிக்கும்போது, அவற்றில் ஓட்டை விழாது, படகுகளும் விபத்துக்கு இலக்காகாது. மீனவர்கள் வெகு தூரம் சென்று, நீண்ட நாட்கள் கடலிலே தங்கி, மீன் பிடிப்பதற்கு வசதியாக, இராமநாதபுரம் மாவட்டத்தில் கண்ணாடி நாரிழைப் படகுகளை வழங்குவதற்கு அரசு ஊக்கமளிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்ணாடி நாரிழைப் படகுகளைப் பயன்படுத்த அரசு அனுமதி வழங்கியிருக்கிறது என்று என்னுடைய முதல் பதிலிலேயே சொல்லிவிட்டேன்.*

2014 ஆகஸ்ட் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்தில் மரத்தினால் செய்யப்பட்ட நாட்டுப் படகுகளே மீன் பிடிக்கப் பெரும்பாலும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. Indian Coast Guard, Indian Navy *மற்றும்* Customs *போன்ற துறைகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, கடலோரப் பாதுகாப்பு நலன் கருதி, இராமநாதபுரம் மாவட்டத்தில் கண்ணாடி நாரிழைப் படகுகளுக்கு மீன் பிடிக்க அனுமதி வழங்கப்படாமல் இருந்துவந்த நிலையில், தற்போது இம்மாவட்ட மீனவர்களின் கோரிக்கைகளையேற்று, அவர்களுடைய வாழ்வாதாரத்தைக் கருதி, வடக்குக் கடற்பகுதியான பாக் ஜலசந்தியிலே எஸ்.பி. பட்டணம் முதல் தேவிப்பட்டினம் வரை 711 கண்ணாடி நாரிழைப் படகுகளுக்கு மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டு, பதிவு செய்யப்பட்டு, இயக்கத்தில் உள்ளன. மேலும், 2014 ஆம் ஆண்டு முதல் மன்னார் வளைகுடா பகுதியில் முத்துப்பேட்டை முதல் ரேஸ்மா நகர் வரை உள்ள மீனவர்களுக்கு 45 கண்ணாடி நாரிழைப் படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டு, ஆக மொத்தம் 756 கண்ணாடி நாரிழைப் படகுகள் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. சென்ற ஆண்டு மீன் வளத் துறை மானியக் கோரிக்கையின்போது கண்ணாடி நாரிழைப் படகுகள் மூலமாக ஆழ் கடல் மீன் பிடிப்புப் பயிற்சி, சிறிய மீன்பிடிக் கலன்களில் தொலைதூரம் சென்று கடலிலே தங்கி மீன் பிடிக்க ஊக்கம் அளித்தல் போன்ற பயிற்சிகள் வழங்கப்படும் என்றும் இதற்கு 85.81 இலட்சம் ரூபாய் மதிப்பீடு என்றும் ஓர் அறிவிப்பு செய்திருந்தீர்கள். இந்தப் பயிற்சிகள் தொடங்கப்பட்டனவா, எந்தெந்த மாவட்டங்களிலே நடத்தப்பட்டிருக்கின்றன, எவ்வளவு பேர் பயனடைந்திருக்கிறார்கள் என்பதை நான் அறிய விரும்புகிறேன்.*

முற்பகல் 11-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத கேள்வியாக இருந்தாலும்கூட, நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், ஆழ்கடல் மீன் பிடிப்பை, சூரை மீன் பிடிப்பை மேம்படுத்துவதற்காக, கண்ணாடி நாரிழைப் படகுகளை அதிகப்படியாக அபிவிருத்தி செய்து, தொழில் செய்வதற்கு ரூபாய் 85 இலட்சம் அல்ல; ரூபாய் 5 கோடி நிதி ஒதுக்கி, மீன் பிடிப்பதற்குப் பயிற்சியும் அளிக்கப்பட்டிருக்கிறது.

மேலும், நாகப்பட்டினம், இராமநாதபுரம், தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ளவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறது. இந்தியாவிலே எங்கும் இல்லாத அளவிற்கு, இந்த ஆண்டு, 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 30 இலட்சம் ரூபாய் மானியத்துடன், அங்குள்ள மீனவ நண்பர்களின் வாழ்விற்காகவே மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அரிய பல திட்டங்களைத் தீட்டியுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆக, சென்ற ஆண்டு அந்தத் திட்டத்திலே மீனவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள். இந்த ஆண்டு கிட்டத்தட்ட 271 மனுக்கள் பெறப்பட்டிருக்கின்றன. அவை ஆய்வு செய்யப்பட்டு, அவர்கள் வைத்த கோரிக்கையை ஏற்று, ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு ஏற்றவாறு, சூரை மீன் பிடிப்பதற்கு ஏற்றவாறு, 60 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 30 இலட்சம் ரூபாய் மானியத்தில் அவர்கள் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதற்கு, ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கு அவர்களை ஊக்குவிப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 372, மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.பி. நாகைமாலி, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.